செ.வெ.எண். 67/பிப்ரவரி தேதி : 25.02.2017

**<u>தருமபுரி மாவட்டம், அன்னசாகரம் மற்றும் சோகத்தூர் ஆகிய பகுதிகளில் ஊரக வளர்ச்சி துறையின் மூலம் ஏரிகளில் உள்ள சீமை கருவேல மரங்களை அகற்றும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட முதன்மை நீதிபதி திருமதி. சுபாதேவி, மாவட்ட மகளிர் நீதிமன்ற நீதிபதி திருமதி. மீரா சுமதி ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.</u>**



தருமபுரி மாவட்டம் முழுவதும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகளில் உள்ள ஏரி, குளம், குட்டை அரசு புறம்போக்கு மற்றும் தனியாருக்கு சொந்தமான நிலங்களில் வளர்ந்துள்ள சீமைக் கருவேல மரங்களை முற்றிலுமாக இம்மாத இறுதிக்குள் அகற்ற மாண்புமிகு சென்னை உயர்நிதி மன்றம் மதுரைக்கிளை கடந்த 10.2.2017 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவின்படி மாவட்டம் முழுவதும் பொதுப்பணித்துறை மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் மொத்தம் 586 குளங்கள் உள்ளன. அதற்கு வனத்துறை மூலம் சீமைக்கருவேல மரங்களை அகற்ற மதிப்பீடு 66 ஏரிகளுக்கு பெறப்பட்டு ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் பொதுப்பணித்துறை மூலம் ஏலம் விடப்பட்டு போர்க்கால அடிப்படையில் சீமை கருவேல மரங்களை அகற்றும் பணி நடைபெற்று வருகிறது. மீதம் உள்ள ஏரிகளிலும் சீமைக்கருவேல மரங்கள் அனைத்தும் அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் தனியார் நிலங்களில் வளர்ந்துள்ள சீமை கருவேல மரங்களை அகற்ற மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்ற மதுரைக்கிளை உத்தரவின்படி ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் நோட்டிஸ் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பணிகளை விரைவாக முடிக்க ஆட்கள் மட்டுமல்லாமல் ஜேசிபி இயந்திரங்களும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மாவட்டம் முழுவதும் சீமைக் கருவேல மரங்கள் 15 தினங்களுக்குள் அகற்றும் பணியை விரைந்து முடிக்க சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட நீதிபதி திருமதி. சுபாதேவி அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. எம். காளிதாசன், செயற் பொறியாளர் நீர்வள ஆதார அமைப்பு பொதுப்பணித்துறை

திரு. பாலசுப்ரமணியம், வருவாய் கோட்டாட்சியர் திரு. இராமமூர்த்தி, மாவட்ட நீதி மேலாளர் திரு. ராஜன், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.